# போக்குவரத்து அமைச்சு

## *2020 ஆம் ஆண்டின் செயற்பாட்டு அறிக்கை*

*7 ஆவது மாடி,*
*செத்சிறிபாய, II ஆம் கட்டம்*
*பத்தரமுல்லை*

*2021 – ஜூலை*

## **உள்ளடக்கம்**

*பக்கம்*

***அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு***

*1.1* *அறிமுகம்*
*1.2* *நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்*
*1.3* *பிரதான செயற்பாடுகள்*
*1.4* *நிறுவன விளக்கப்படம்*
*1.5* *அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்*
*1.6* *அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்*
*1.7* *வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம்*

***அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்***

*சிறப்பு அடைவுகள் சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகளை சுருக்கமாக விளக்குக*

***அத்தியாயம் 03 - வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை***

*3.1* *நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று*
*3.2* *நிதி நிலைமை பற்றிய கூற்று*
*3.3* *காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று*
*3.4* *நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்*
*3.5* *வருமான சேகரிப்பு செயலாற்றுகை*
*3.6* *ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை*
*3.7* *நீ. பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/மாவட்டச் செயலகம்/மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு*
*3.8* *நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை*
*3.9* *கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை (இணைப்பு – 01)*

***அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள்***

*4.1* *நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)*

***அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை***

*5.1* *அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டுக*
*5.2* *பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக*

***அத்தியாயம் 06 – மனித வள விபரம்***

*பதவியணி முகாமைத்துவம்*
*6.1* *பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக*
*6.2* *மனித வள அபிவிருத்தி*

***அத்தியாயம் 07 – இணக்க அறிக்கை***

*அத்தியாயம் 01*

## 1.1 அறிமுகம்

ஒரு நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திக்காக போக்குவரத்து சேவையானது அத்தியவசியமான காரணியாகும். தயாரிப்புகளை பாதுகாப்பாகவும் வினைத்திறமையாகவும் சந்தைக்கு கொண்டு செல்வதும், தொழிற்படையினருக்கு சரியான நேரத்திற்கு வசதியான முறையில் பணியிடங்களை அடைவதற்குத் தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்குவதும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. பொருளாதார அபிவிருத்திக்கு இணைவாக போக்குவரத்துக்கு தேவையான கேள்வி அதிகரித்துள்ளதால் எழுந்துள்ள போக்குவரத்து நெரிசல், வீதி விபத்துக்களின் அதிகரிப்பு மற்றும் சுற்றாடல் மாசுபாடு போன்ற பிரச்சினைகளை கருத்திற்கொள்ளப்பட்டு போக்குவரத்துத் துறையில் சரியான நேரத்தில் மாற்றங்களைச் செய்வதன் மூலம் இலங்கையில் போக்குவரத்துத் துறையை புதிய பாதையில் இட்டுச் செல்வதற்கு போக்குவரத்து அமைச்சு பல்வேறு கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடங்கியுள்ளது.

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை வரம்புக்கமைய அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் பங்களிப்பின் கீழ் நிலைப்பாட்டு போக்குவரத்து தேவைகளுக்கான கருத்திட்டங்களை அடையாளம் காணல், தயாரித்தல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்வதன் மூலம் அளவு ரீதியான மற்றும் தரமான போக்குவரத்து சேவையை வழங்குவது போக்குவரத்து அமைச்சின் முக்கிய கடமைப் பொறுப்பாகும். அதற்கமைய, புகையிரத போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக புதிய புகையிரத பாதைகளை நிர்மாணித்தல், புதிய விசையாற்றல் தொகுதிகள், பயணிகள் புகைவண்டிப் பெட்டிகளை கொள்வனவு செய்யும் நவடிக்கைகளைப் போன்று, புகையிரத வீதிகள், கட்டிடங்கள், பாலங்கள் மற்றும் சமிஞை முறைமை போன்ற பிரிவுகளில் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தகவல் தொழில்நுட்பத்துடன் இரண்டரக் கலந்து பயணிகளுக்கு எளிதான மற்றும் நம்பகமான முன் கொடுப்பனவு அட்டை முறையை அறிமுகப்படுத்துதல் மற்றும் கையடக்க தொலைபேசி மற்றும் இணையத்தின் வழியாக பேருந்துச் சேவைகள் தொடர்பாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் ஆசன முன்பதிவு செய்வதற்காக மென்பொருளை தயாரித்தல் முதலிய நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக, சமூக நலன்புரி செயல்முறையின் ஒரு பகுதியாக " மோதி விட்டு தப்பிச்செல்வதால்" பாதிக்கப்பட்ட 34 குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது.

2020 வருடத்தின் ஏற்பட்டுள்ள கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோயைத் தொடர்ந்து புகையிரத திணைக்களத்தின் வருமானம் கணிசமாகக் குறைந்தது.இருப்பினும், சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டு மக்களுக்கு போக்குவரத்து சேவைகள் தடங்களின்றி வழங்குவதற்காக நடவடிக்கையெடுக்கப்பட்டதுடன், புகையிரத சேவையினை வினைத்திறன் வாய்ந்த முறையில் கொண்டு நடாத்துவதற்கான பெறுகை, பயணிகள் புகைவண்டிப் பெட்டிகள், புகையிரத வீதி புனரமைப்பு மற்றும் புகையிரத நிலையங்களின் துப்புரவு ஏற்பாட்டு வசதிகள் மேம்படுத்துதல் முதலியன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.மேலும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மூலம் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள மாகாணங்களுக்கு இடையேயான பேருந்து சேவைகளை முழுமையாக நிறுத்தியதன் காரணமாக, அனுமதிப்பத்திரங்களை இற்றைப்படுத்தும் கட்டணங்கள் மற்றும் விலைகளை அழைக்கும்போது செலுத்த வேண்டிய கட்டணங்களை வசூலிப்பதற்கு கால அவகாசம் வழங்கியுள்ளது. மேலும் தனியார் பயணிகள் போக்குவரத்து கைத்தொழில் பாதுகாக்கும் நோக்குடன் அரச வங்கிகளினூடாக

3 இலட்சம் ரூபா சலுகைக் கடன் முறை செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, மக்களுக்கு சுகாதார பாதுகாப்பு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு முன்னுரிமை அளித்து பேருந்து முனைய கிருமி நீக்கம் செய்தல், கை கழுவுதல் வசதி ஏற்பாடு செய்தல் மற்றும் 2020.03.16 ஆந் திகதி முதல் அரச விடுமுறை நாள் அறிவிப்புடன், மக்களுக்கு கொழும்பு மற்றும் புறநகர்ப்பகுதிகளில் இருந்து தனது சொந்த கிராமங்களுக்கு செல்வதற்காக விரைவான போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**2020** ஆம் ஆண்டிற்கு முன்னர் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்ட பெரும்பாக கொழும்பு போக்குவரத்து வலையமைப்பு மேம்படுத்தும் கருத்திட்டம் மற்றும் சஹசர பேருந்து நவீனமயப்படுத்தும் கருத்திட்டம் என்ற இரு கருத்திட்டங்களும் குறிப்பாக பயணிகள் சேவை பேருந்து முகாமைத்துவத்துக்கான முக்கிய நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடுவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளது.

அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ள பணிகள் மிகவும் பயனுறுதி வாய்ந்த முறையிலும் வினைத்திறன் வாய்ந்த முறையிலும் நிறைவேற்றுதல் மற்றும் வரவு செலவுத்திட்ட ஏற்பாடு திறம்பட செயல்படுத்துவதற்கும் அதனை சரியான முறையில் நிர்வகிப்பதற்கும் எடுக்கப்படுகின்ற கொள்கை ரீதியிலான முடிவுகள் மற்றும் அந்த முடிவுகளை செயல்படுத்துவதில், அமைச்சின் அனைத்து பிரிவுகளும் மற்றும் அமைச்சின் கீழ் செயல்படுகின்ற இலங்கை புகையிரத திணைக்களம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை ஆகியவை ஒரு சிறந்த பணியைச் செய்து வெற்றிகரமான முடிவுகளை எய்தப்பெற்ற ஆண்டாக 2020 ஆம் ஆண்டை குறிப்பிட முடியும்.

### 1.2 *அமைப்பின் பார்வை, நோக்கம் மற்றும் நோக்கங்கள்*

**தொலைநோக்கு**

*இலங்கைப் பிராந்தியத்தினுள் முன்னணி பொதுமக்கள் மையப் போக்குவரத்து திட்டத்தினைக் கொண்ட நாடாகத் திகழச் செய்தல்.*

***பணிக்கூற்று***

*பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு நவீன தொழில்நுட்ப மூலோபாயங்களை உபயோகித்து மிகவும் உயர் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை செயற்படுத்துதல், மேம்பாடு மற்றும் நிலைபேறாக முன்னெடுத்துச் செல்லுதல்.*

**நோக்கங்கள்**

- பயணிகள், சரக்குப் போக்குவரத்து மற்றும் சுற்றுலா போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.
- பொதுமக்களின் நம்பிக்கை வென்று மோட்டார் வாகன நெரிசல் மற்றும் வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக அட்டவணைக்கமைய போக்குவரத்துச்சேவைகளைக் கொண்டு நடாத்துதல்.
- தாபன கட்டமைப்பை வலுப்படுத்துதல்
- நெடுஞ்சாலைகள் மற்றும் புகையிரத வீதிகளுடன் தொடர்புடைய சுற்றாடல் நட்புறவு மற்றும் பயணிகள் நலனோம்பு குறித்து போக்குவரத்து முறைமையொன்றினை நிறுவுதல்
- 1991 ஆம் ஆண்டு 37 ஆம் இலக்கம் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டம் மற்றும் 1950 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்கம் கொண்ட புகையிரத சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

## 1.3 *பிரதான செயற்பாடுகள்*

1. "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக மற்றும் அரசினால் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் ஏனைய கொள்கைகளின் அடிப்படையில் "வினைத்திறன்மிக்க அத்துடன் சூழல்நேய பொதுப் போக்குவரத்துத் தொகுதியொன்றுக்காக போக்குவரத்து வலையமைப்பை விருத்தி செய்வதற்கு" இராஜாங்க அமைச்சுக்குரிய கொள்கைரீதியான வழிகாட்டல் வழங்குதலும் விதித்துரைக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய போக்குவரத்து எனும் விடயத்துடனும் பின்வரும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் பணிகளுடனும் அவ்விடயங்களுக்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தமைத்தலும் தேசிய வரவுசெலவு, அரச முதலீடுகள் மற்றும் தேசிய அபிவிருத்திச் செயற்பாடுகளின்கீழான கருத்திட்டங்களைச் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.
    - *இலங்கைப் புகையிரதத் திணைக்களம்*
    - *தேசிய போக்குவரத்து ஆணைக்குழு*
    - *வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை*
2. சூழல்நேய போக்குவரத்து தொகுதியொன்றை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளையும், ஒழுங்குவிதிகளையும் தயாரித்தல்.
3. பொதுப்போக்குவரத்துத் தொகுதியின் மீது மக்கள் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக உயர்தரத்திலான வீதி வசதிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
4. வீதி நெருக்கடி, பயணிகள் நெருக்கடி மற்றும் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்காக கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டி நெறிகளையும் சட்டதிட்டங்களையும் அறிமுகப்படுத்தல்.
5. அரசாங்கம் மற்றும் தனியார்துறை போக்குவரத்துச் சேவைகளையும், புகையிரதச் சேவைகளையும் பொதுவானதொரு நேரசூசிக்கமைய இணைந்ததொரு திட்டத்தின் கீழ் ஏற்படுகின்ற போக்குவரத்துச் சேவையாக செயற்படுத்துவதற்குத் தேவையான நவீன தொழில்நுட்ப ஈ-டிக்கட் முறையொன்றை அறிமுகப்படுத்தல்.

6. புகையிரதம் மற்றும் பேரூந்து தரிப்பிடங்களைச் சார்ந்ததாக பொது வசதிகளையும், பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதற்காக தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

7. புகையிரத மற்றும் பேரூந்து சேவைக்குத் தேவையான புகையிரதங்கள் மற்றும் பேரூந்துகளை பராமரித்தல்.

8. புகையிரதப் பெட்டிகள் மற்றும் பேரூந்துகள் தயாரிப்பு மற்றும் போக்குவரத்துத்துறைக்குரியதாக உள்நாட்டு கைத்தொழில் தொகுதியொன்றை கட்டியெழுப்புவதற்குத் தேவையான பெறுகை முறைகளை அறிமுகப்படுத்தல்.

9. கொழும்பு அம்பாந்தோட்டை காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை துறைமுகங்களுக்கு புகையிரதங்கள் மூலம் பொருட்களை கொண்டு செல்வதற்குத் தேவையான வசதிகளை தாபித்தலும் விரிவாக்குதலும்.

10. தகவல் தொழில்நுட்பத்தில் ஈடுபடுவதன் மூலம் மோட்டார் வாகனப் பதிவை மக்கள் நேயமிக்க வினைத்திறமையானஅத்துடன் ஊழலற்ற செயல்நெறியாக மாற்றுதல்.

### *1.4 அமைச்சின் நிறுவன விளக்கப்படம்*

***1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்***

*1.* இலங்கைப் புகையிரதத் திணைக்களம்

***1.6 அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்***

1. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
2. வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபை

***1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (இருப்பின்)***

| கருத்திட்டத்தின் பெயர் | கொடைவழங்கும் முகவர் | கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – ரூபா மில். | கருத்திட்டக் காலம் |
|---|---|---|---|
| மாத்தறை – கதிர்காமம் புதிய புகையிரத வீதிக் கருத்திட்டம் | Exim Bank (China) | அ.டொ. மில்லியன் 278.2 | **2020.12.31** ஆந் திகதியிற்கு கருத்திட்டம் நிறைவு செய்துள்ளது. |
| கொழும்பு புறநகர் புகையிரத கருத்திட்டம் | ஆசியா அபிவிருத்தி வங்கி<br>இலங்கை அரசாங்கம் | ரூபா . மில்லியன் **1,456.50**<br>ரூபா . மில்லியன் **9,798.04** | **2016 - 2023** |
| புகையிரத வினைத்திறன் மேம்படுத்தும் கருத்திட்டம் | ஆசியா அபிவிருத்தி வங்கி<br>இலங்கை அரசாங்கம் | ரூபா . மில்லியன் **28,232.00**<br>ரூபா . மில்லியன் **5,646.40** | **2019 - 2025** |

## *அத்தியாயம் 02*

**போக்குவரத்து துறையில் முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு…**

பயணிகள் மையம் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட போக்குவரத்து முறைமை ஆகியவை நாட்டின் அபிவிருத்திக்கு இன்றியமையாத அங்கமாக இருப்பதுடன், பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தரமான மற்றும் போதியளவில் போக்குவரத்து சேவையை வழங்குவது போக்குவரத்து அமைச்சின் முக்கிய கடமைப் பொறுப்பாகும்……. இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்பதால், பொருளாதார அபிவிருத்தியின் புதியதொரு பாதையை நோக்கிய பயணத்தில் நாட்டில் காணப்படும் பன்முக சேவைகளுள் அத்தியவசிய சேவையான போக்குவரத்து முறைமையும் அதற்கு இணையாக அபிவிருத்தியை நோக்கி பிரவேசிக்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் தேசிய கொள்கை வரம்பான ''சுபீட்சத்தின் நோக்கு'' மற்றும் ஏற்ப போக்குவரத்து அமைச்சு ''அதன் செயலாற்றுகை இலக்கினை மையமாகக் கொண்ட பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு அதிக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து சேவைகளின் மேம்பாட்டிற்காக வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள், முதன்மையான மற்றும் பயனுள்ள போக்குவரத்து துறைகளில் முதலீடு செய்து 2020 ஆம் வருடத்துக்குள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பல கருத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வெற்றிகரமான முடிவுகள் எய்தியுள்ளன.

அதன்படி, பேருந்துகள் மற்றும் புகையிரத மையமாகக் கொண்டு பொதுமக்களுக்கு வினைத்திறன் வாய்ந்த மற்றும் இலாபகரமான போக்குவரத்து சேவையினை வழங்குவதற்கு இலங்கை புகையிரத திணைக்களம் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இற்றையாகும்போது பல நடவடிக்கைகளை எடுத்துள்ளன. புகையிரத போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக மஹவ இலிருந்து ஓமந்தை வரையிலான புகையிரத வீதியினை புனரமைக்கும் கருத்திட்டம், தெற்கு பயாகளை இலிருந்து அலுத்காமம் வரை இரட்டை புகையிரத பாதை அமைக்கும் கருத்திட்டம் மற்றும் பொல்கஹவெல இலிருந்து குருநாகல் வரையிலான இரட்டை புகையிரத பாதையினை அமைக்கும் கருத்திட்டத்தின் ஆரம்ப பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், பயணிகள் மற்றும் புகையிரத போக்குவரத்து வினைத்திறனை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு புதிய 200 புகையிரதக் கடவைகளை நிறுவுவதற்காக கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்பட்டுள்ளன.

புதிய புகையிரத வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ், மாத்தறை – கதிர்காமம் புகையிரத வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கட்டத்தின் முதலாம் கட்டம் இற்றையாகும்போது நிறைவுசெய்து புகையிரத சேவை வினைத்திறன் வாய்ந்த முறையில் இடம்பெறுவதுடன், இரண்டாம் கட்டமாக பெலிஅத்தை இலிருந்து கதிர்காமம் வரையிலான புதிய புகையிரத வீதி அமைப்பதற்காக ஆரம்ப சாத்தியவள ஆராய்ச்சி நடடிக்கைகள் மேற்கொள்வதற்குள்ளது. ஆசியா அபிவிருத்தி வங்கியின் பங்களிப்புடன் செயற்படுத்தப்படுகின்ற கொழும்பு புறநகர் புகையிரத கருத்திட்டத்தின் **(CSRP)** கீழ் காணிகளைக் கையகப்படுத்துதல், நஷ்டஈடு வழங்குதல் மற்றும் மீள குடியமர்த்தும் நடவடிக்கைகள் இப்போதாகும்போது இடம்பெற்று வருகின்றது. மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்திற்கு இணைவாக ஆசியா அபிவிருத்தி வங்கிக் கடன் உதவி திட்டத்தின் கீழ் புகையிரத வீதி வினைத்திறனை மேம்படுத்தும் கருத்திட்டம் **(REIP)** செயற்படுத்தப்படும். இந்த கருத்திட்டத்தின் கீழ் நாடாளவிய புகையிரத தொலைத்தொடர்பு முறைமை மற்றும் நாடாளவிய புகையிரத நுழைவுச்சீட்டுக்களை கொள்வனவு செய்யும் முறைமைக்குரிய கொள்வனவுகள் இற்றையாகும்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. குருநாகல் ஹபரணை புதிய புகையிரத வீதிக் கருத்திட்டத்தின் இற்றையாகும்போது அடிப்படை அளவை நடவடிக்கைகள், மண் பரிசோதிக்கும் நடவடிக்கைகள் மற்றும் நீரியல் ஆராய்ச்சி நடவடிக்கைகள் தற்போதாகும்போது முடிவு செய்யப்பட்டுள்ளன.

தரமான மற்றும் மக்கள் நட்புறவு வாய்ந்த வீதி போக்குவரத்துக்காக முன்னுரிமை வழங்கி சலுகைக் கட்டண முறையின் கீழ் பாடசாலை மாணவர்களுக்காக செயற்படுத்தப்படுகின்ற ''சிசு செறிய'' மற்றும் கிராமிய மக்களின் அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதற்காகத் தேவையான போக்குவரத்து வசதிகள் தொடர்ச்சியாக நம்பகரமான மற்றும் இலாபகரமானதாக வழங்குவதனை நோக்கமாகக்கொண்டுள்ள **''கெமி செறிய''** மற்றும் **''நிதிசெறிய''** பேருந்துச் சேவைகள்

இற்றையாகும்போது வெற்றிகரமான முறையில் செயற்படுத்தப்படுகின்றது. அதற்கமைய **2020** ஆம் ஆண்டில் சிசுசெறிய **49** சேவைகள், நிசி செறிய 13 புதிய சேவைகள் மற்றும் கெமிசெறிய புதிய சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக மாகும்புர பன்முக பரிமாற்ற நிலையத்தினை அடிப்படையாகக் கொண்டு **Park and Ride** வசதி ஆரம்பிப்பதற்காக அடிப்படை ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

நவீன தொழில்நுட்பம் கலந்து பெறுமானம் சேர்க்கப்பட்ட பொது போக்குவரத்து சேவையை நிறுவுவதற்காக இலகுவான மற்றும் நம்பகமான முன் கொடுப்பனவு அட்டை முறையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து **“Back** End” மென்பொருள் கொள்வனவு செய்வதற்குத் தேவையான கேள்விப்பத்திர நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும், கையடக்கத்தொலைபேசி மற்றும் இணையத்தினூடாக பேருந்துச் சேவைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பேருந்து இருக்கைகளை முன்பதிவு செய்வதற்காக” **Mybus-SL**” என்ற பேரில் கையடக்க தொலைபேசி மென்பொருள் தயாரிப்பு முதலிய நடவடிக்கைகள் மேற்றகொள்ளப்பட்டுள்ளன.

**2020** மார்ச் மாதத்தில் ஏற்பட்ட கொவிட்**- 19** உலகளாவிய தொற்றுநோய் நிலையில் புகையிரத சேவையினை வினைத்திறன் வாய்ந்த முறையில் கொண்டு நடாத்தவதற்காக பெறுகை**,** துப்புரவு ஏற்பாட்டு வசதிகளை மேம்படுத்துவது உள்ளிட்ட சேவைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், பெஸ்டியன் மாவத்தை பேருந்து முனையம் தொடர்பாக கிருமி நீக்கம், கை கழுவுவதற்கான வசதி உட்பட பல சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக, ஊரடங்கு உத்தரவு பிறப்பித்திருந்த காலப்பகுதிக்குள், பொதுமக்கள் 1955 உடனடி தொலைபேசி அழைப்பு 24 மணி நேரமும் இயக்கநிலையில் பேணப்பட்டு பொதுமக்களினால் பொது போக்குவரத்து தொடர்பில் மேற்கொள்ளப்படடுகின்ற விசாரணைகளுக்கு பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வீதி விபத்துகளற்ற சமூகத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் மூலம் 10 பாடசாலைகளில் மாணவர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் வீதி பாதுகாப்பு வலயங்களை நிறுவுதல் மேற்கொள்ளப்பட்டதுடன் சமூக நல செயல்முறையாக ‘‘விபத்துக்களை ஏற்படுத்தி தப்பியோடுவதால்’’ பாதிக்கப்பட்ட 34 குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது. அதற்கமைய, 2020 ஆம் ஆண்டின் இறுதிக்குள், அடையாளம் காணப்படாத வீதி விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 42.75 இலட்சம் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.மேலும், ‘‘குழந்தைக்கு பாதுகாப்பான பயணத்தில் இருக்கிறதா’’ என்ற வாசகத்தினை அடிப்படையாகக் கொண்டு இலங்கை ஆட்டோமொபைல் அசோசியேஷன், இலங்கை பொலீஸ் மற்றும் வீதி பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையுடன் இணைந்து மக்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்று அம்பாந்தோட்டை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னாள் கௌரவ போக்குவரத்து அமைச்சர் தலைமையில் இடம்பெற்றது.

மேலும் இலங்கைக்குச் சொந்தமாகவுள்ள ஒட்டுமொத்த பயணிகள் போக்குவரத்து பேருந்துகள் எண்ணிக்கையிலிருந்து **2/3** இலும் அதிகமான அளவு உடைமை தனியார் பிரிவுக்குச் சொந்தமாக இருப்பதுடன் இந்த சேவைக்காக முறைசார் முகாமைத்துவ செயல்முறையினைத் தயாரிப்பதற்கு ‘‘சஹசர’’ பேருந்து பயணிகள் மறுசீரமைப்பு கருத்திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் கொழும்பு மற்றும் பிரதான நகரங்களில் காணப்படுகின்ற வாகன நெரிசலைக் குறைக்கும் நோக்குடன் பல்முனை போக்குவரத்து நிலையத்தினை நிறுவம் நடவடிக்கைகள் மற்றும் பேருந்துகள் முகாமைத்துவத்துக்கான டிஜிட்டல் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தும் நடவடிக்கைககள் பெரும்பாக கொழும்பு நகர போக்குவரத்து வலையமைப்பினை மேம்படுத்தும் கருத்திட்டம் **(3K)**மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


நாட்டின் போக்குவரத்து துறையிலுள்ள சவால்களை வெற்றிகொண்டு நிலையான அபிவிருத்திக்கான பயணத்தில் முதல் படி பொது போக்குவரத்து சேவையை வலுப்படுத்தி பொது மக்களை அதற்காக ஈர்த்துக்கொள்வதாகும். அதற்காக எமது நாட்டுக்கு பொருந்துகின்ற விஞ்ஞான ஆராய்ச்சி பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட நவீன தொழில்நுட்பம் பொது போக்குவரத்தின்

மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்பட வேண்டும். போக்குவரத்துத் துறையில் ஆராய்ச்சி அறிவை போக்குவரத்து கைத்தொழில் துறைக்கு வழங்குவதற்காக ஆராய்ச்சியாளர்களுக்கும் மற்றும் போக்குவரத்து தரப்பினர்களுக்கும் இடையில் சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் தகவல்தொடர்புகளை கட்டியெழுப்புவது மிக முக்கியமானதாகும்.

போக்குவரத்து துறை என்பது ஒரு நாட்டின் ஒவ்வொரு துறையினதும் எதிர்கால பயணத்தினதும் முன்னேற்றத்தையும் பாதிக்கும் ஒரு முக்கிய காரணியாகும். ஒரு நாடு உலகளாவிய பொருளாதார போக்குகளுக்கு ஏற்ப சரியான முறையில் சமநிலையெய்துதில் போக்குவரத்துத் துறை முக்கியமானது.எனவே, போக்குவரத்துத் துறையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செயவதற்காக திட்டமிட்ட தொலைநோக்குடன் பணியாற்றுவதன் முக்கியத்துவத்தைக் கண்டறிந்து அனைத்து போக்குவரத்து பங்குதாரர்களின் நேரடி பங்களிப்புடன் போக்குவரத்து அமைச்சினால் 2021-2025 தரைப் போக்குவரத்தின் பொருட்டு நடுத்தரகால திட்டமொன்றினை வகுக்கும் நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நிறைவடைந்தது.அந்த திட்டத்தை யதார்த்தமாக்குவதும், மக்களுக்கு மிக உயர்ந்த தரமான மற்றும் வினைத்திறன் வாய்ந்த போக்குவரத்து சேவைகளை வழங்குவது இந்த அமைச்சின் நோக்கமாகும்.

***என்.பீ.எம். ரணதுங்க***
செயலாளர்
போக்குவரத்து அமைச்சு

## போக்குவரத்து அமைச்சு



## *அத்தியாயம் 03*

### *2020 டிசம்பர் 31 முடிவுற்று வருடத்துக்கான ஒட்டு மொத்த நிதிச் செயலாற்றுகை*

### *3.1 நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று*

ஏசீஏ-எப்

**2020 டிசம்பர் 31 முடிவுற்ற காலத்திற்கான**
**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

ரூபா

| வ.செ. திட்டம் 2020 | | குறிப்பு | உண்மையான 2020 | உண்மையான 2019 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமான பெறுகைகள்** | | - | 24,049,292,729 | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள், சேவைகளுக்கான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரி | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியல்லா வருமானம் மற்றும் பிற | 4 | - | 24,049,292,729 | |
| - | **மொத்த வருமான பெறுகைகள் (அ)** | | - | 24,049,292,729 | |
| - | **வருமானமல்லாத பெறு கைகள்** | | - | - | |
| - | திறைசேரி முற்பணம் | | 11,047,156,399 | 17,213,285,456 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 13,194,696 | 12,140,695 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 13,360,288 | 11,581,564 | ஏசீஏ-5/5(அ) |
| - | வேறு பெறுகைகள் | | 105,125,473 | 18,920,731 | |
| - | **மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ)** | | **11,178,836,855** | **17,255,928,445** | |
| - | **மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ = (அ)+(ஆ)** | | **11,178,836,855** | **41,305,221,174** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ***கழி : செலவினம்*** | | | | |
| - | ***மீண்டெழும் செலவினம்*** | | - | - | |
| 141,889,000 | *வேதனாதிகள், சம்பளங்கள், பிற ஊழிய நன்மைகள்* | **5** | 141,618,362 | 147,332,392 | |
| 148,717,000 | *ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்* | **6** | 146,492,653 | 169,060,848 | ***ஏசீஏ -*** 2(ii) |
| 651,955,000 | *உதவு தொகை, மானியம் மற்றும் மாற்றல்கள்* | **7** | 403,809,824 | 13,859,861,283 | |
| - | *வட்டிக் கொடுப்பனவுகள்* | **8** | - | - | |
| 317,000 | *ஏனைய மீணடெழும் செலவினம்* | **9** | 316,653 | - | |
| 942,878,000 | ***மொத்த மீண்டெழும் செலவினம் (ஈ)*** | | **692,237,491** | **14,176,254,523** | |
| | ***மூலதனச் செலவினம்*** | | | | |
| 1,207,000 | *மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு* | **10** | 401,458 | 845,194 | |
| 11,564,118,000 | *மூலதன சொத்துகளை கையகப்படுத்தல்* | **11** | 8,992,727,539 | 4,133,251,654 | |
| - | *மூலதன மாற்றல்கள்* | **12** | - | 2,659,618,807 | ***ஏசீஏ -*** 2(ii) |
| - | *நிதி சொத்துக்களை கையகப்படுத்துதல்* | **13** | - | - | |
| 720,000 | *திறன் மேம்பாடு* | **14** | 381,500 | 639,200 | |
| 4,460,247,000 | *பிற மூலதன செலவுகள்* | **15** | 4,202,109,482 | - | |
| 16,026,292,000 | ***மொத்த மூலதன செலவினம் (உ)*** | | **13,195,619,979** | **6,794,354,855** | |
| | ***பிரதான பேரேட்டு செலவுகள் (ஊ)*** | | **22,266,559** | **23,082,546** | |
| | ***வைப்புக் கொடுப்பனவு*** | | **11,513,727** | **12,820,733** | ***ஏசீஏ*** -4 |
| | ***முற்பணக் கொடுப்பனவு*** | | 10,752,832 | 10,261,813 | ***ஏசீஏ -*** 5/5(*அ*) |
| | *மொத்த செலவினம் எ =* **(***ஈ***+***உ***+***ஊ***)** | | 13,910,124,029 | 20,993,691,925 | |
| 16,969,170,000 | **2019** ***டிசம்பர் 31இல் முற்பண மீதி ஏ = (இ -எ)*** | | (2,731,287,174) | 20,311,529,249 | |

***3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று***

***ஏசீஏ - பீ***

***2020 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு***

***நிதி நிலைமை பற்றிய கூற்று***

| | | உண்மையான | |
|---|---|---|---|
| | குறிப்பு | **2020** | **2019** |
| | - - | ரூபா | ரூபா |
| **<u>நிதி அல்லாத சொத்துக்கள்</u>** | | | |
| சொத்து, பொறித்தொகுதி உபகரணம் | ***ஏசீஏ* -6** | 49,524,851,468 | 41,141,155,251 |
| **<u>நிதி சொத்துக்கள்</u>** | | | |
| முற்பணக் கணக்குகள் காசு | ***ஏசீஏ* - 5/5(அ)** | 31,609,959 | 34,217,415 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ***ஏசீஏ* -3** | - | 713,805 |
| **மொத்த சொத்துக்கள்** | | **49,556,461,427** | **41,176,086,471** |
| **<u>நிகர சொத்து / பங்கு</u>** | | | |
| நிகர சொத்து | | 29,218,596 | 33,507,021 |
| சொத்து, பொறித்தொகுதி உபகரண ஒதுக்கு | | 49,524,851,468 | 41,141,155,251 |
| வாடகை, பணி முற்பண ஒதுக்கு | ***ஏசீஏ* -5(ஆ)** | | |
| **<u>நடைமுறை பொறுப்புக்கள்</u>** | | | |
| வைப்புக் கணக்கு | ***ஏசீஏ* -4** | 2,391,363 | 710,394 |
| முற்பண மீதி | ***ஏசீஏ* -3** | - | 713,805 |
| **மொத்த பொறுப்புகள்** | | **49,556,461,427** | **41,176,086,471** |

*பக்க இல 4 முதல் 62 வரையிலான ஏ.சி.ஏ. வடிவத்தில் எண் 1 முதல் 6 வரை மாதிரிப் படிவங்கள் மூலம் சமர்பிக்கப்பட்டுள்ள கணக்கு தகவல் மற்றும் குறிப்புகள் பக்க இல. 63முதல் 80 வரையில் உள்ளடக்கப்பட்ட கணக்கு குறிப்புகளின் விபரங்களும் இந்த இறுதி நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்ட பகுதிகளாகும். இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இறுதிக் கணக்கின் புள்ளிவிவரங்கள், தொடர்புடைய கணக்கியல் குறிப்புகள் மற்றும் பிற கணக்கியல் தகவல்கள் திறைசேரி கணக்கு புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளதுடன் இந்த புள்ளிவிவரங்களுடன் உடன்படுகின்றன என்பதை, நாங்கள் இதன் மூலம் சான்றளிக்கிறோம்.*

| | | |
|---|---|---|
| ..................... | .................. | ....................................... |
| *பிரதான கணக்கீட்டு அலுவலர்* | *கணக்கீட்டு அலுவலர்* | *பிரதான நிதி அலுவலர்* **/** *பிரதான கணக்காளர்* |
| பெயர் **:**என்.பீ.எம். ரணதுங்க | பெயர் **:** | பெயர்**:** *ஏ.ஏ.டீ.கே. அதிகாரி* |
| பதவி**:** செயலாளர் | *பதவி* **:** | *திகதி* **:** |
| *திகதி* **:** | *திகதி* **:** | |

### *3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று*

***ஏசீஏ - சீ***

***2020 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலப்பகுதிக்கான***

***காசுப் பாய்ச்சல் கூற்று***

| | உண்மையான | |
|---|---|---|
| | **2020** | **2019** |
| | **ரூபா** | **ரூபா** |
| **தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| *மொத்த வரி பெறுகைகள்* | - | - |
| *கட்டனம், அபராதம், தண்டப்பணம், உரிமங்கள்* | - | - |
| *இலாபம்* | - | - |
| *வருமானமல்லாத பெறுகைகள்* | 28,891,821 | - |
| வேறு தலைப்பு தொடர்பில் திரட்டப்பட்ட வருமானங்கள் | 11,247,597 | 22,817,804 |
| கட்டுநிதிக் கணக்கு | 11,047,156,399 | 17,213,285,456 |
| **தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த பாய்ச்சல் (அ)** | **11,087,295,817** | **17,236,103,260** |

| | | |
|---|---|---|
| <u>**கழி – காசு செலவிடல்**</u> | | |
| ஆள்சார் வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவு | 285,893,255 | 152,157,969 |
| மானியம் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள் | 7,850,000,000 | 16,835,897,448 |
| பிற செலவின தலைப்புகளுக்கான செலவினம் | - | 154,964,924 |
| திறைசேரிக்கு செலுத்தப்பட்ட முற்பணம் | 713,805 | - |
| **தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (ஆ)** | 8,136,607,060 | 17,143,020,341 |
| **தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்டதேறிய காசுப்பாய்ச்சல் (இ )= (அ)-(ஆ)** | 2,950,688,757 | 93,082,919 |
| <u>**முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசு**</u> | | |
| வட்டி | - | - |
| பங்கிலாபம் | - | - |
| சொத்து விற்பனை, பௌதிக ஆதன விற்பனை | - | - |
| கடன் அறவீடுகள் | 1,061,793 | - |
| முற்பணங்களை அறவிடுதல் | - | 1,456,308 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசு (ஈ)** | 1,061,793 | 1,456,308 |
| <u>**கழி - காசு செலவிடல்:**</u> | | |
| பௌதிக சொத்து கொள்வனவு அல்லது நிர்மானம் அல்லது வேறு முதலீடுகளை கையகப்படுத்துதல் | 2,948,144,923 | 86,559,909 |
| முற்பண கொடுப்பனவு | 8,026,468 | 8,428,986 |
| **முதலீட்டு செயற்பாட்டுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ)** | 2,956,171,391 | 94,988,895 |
| **முதலீட்டு செயற்பாட்டிலிருந்து தேறிய காசு (ஊ)=( ஈ)-( உ)** | (2,955,109,598) | (93,532,587) |
| **தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு (எ)=( இ) + (ஊ)** | (4,420,841) | (449,668) |
| <u>**நிதி செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்**</u> | | |
| உள்நாட்டு கடன்பெறுகை | - | - |
| வெளிநாட்டு கடன்பெறுகை | | |

| | | |
|---|---|---|
| | - | - |
| பெறப்பட்ட மானியங்கள் | - | - |
| வைப்பு கிடைப்பனவுகள் | 10,706,242 | 5,273,811 |
| **நிதி செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்டமொத்த காசு (ஏ)** | **10,706,242** | **5,273,811** |
| ***கழி - காசு செலவிடல்*** | | |
| உள்நாட்டு கடன்பெறுகை மீள்கொடுப்பனவு | - | - |
| வெளிநாட்டு கடன்பெறுகை மீள்கொடுப்பனவு | - | - |
| வைப்புக் கணக்கு மற்றும் ஏனைய பொறுப்புகள் | 6,285,401 | 4,824,143 |
| ***நிதி செயற்பாடுக்காக செலவிடப்பட்ட மொத்த காசு (ஐ)*** | **6,285,401** | **4,824,143** |
| ***நிதி செயற்பாடிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு (ஒ)=( ஏ)-( ஐ)*** | **4,420,841** | **449,668** |
| ***காசில் தேறிய மாற்றம் (ஓ) = (எ) - ( ஒ)*** | - | - |
| ***சனவரி 01 அன்று ஆரம்ப காசு மீதி*** | - | - |
| ***டிசம்பர் 31 அன்று இறுதி காசு மீதி*** | - | - |

***3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்***

-

***3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை***

ரூபா. **000,**

| **வருமான குறியீடு** | **வருமான குறியீட்டின் விபரம்** | **வருமான மதிப்பீடு** | | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | |
|---|---|---|---|---|---|
| | | **அசல் மதிப்பீடு** | **இறுதி மதிப்பீடு** | **தொகை (ரூபா)** | **இறுதி வருமான மதிப்பீடு %** |
| பொருந் தாது | | | | | |

*3.6* **ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை**

ரூபா. **000,**

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின்% ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| மீணடெழும் | **922,978,000** | **942,878,000** | **692,237,491** | **73.42** |
| மூலதனம் | **14,080,292,000** | **16,026,292,000** | **13,195,619,979** | **82.34** |

*3.7* **நீ. பி. குறிப்பு** *208* **பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/மாவட்டச் செயலகம்/மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு**

ரூபா. **000,**

| தொடர் இல. | அமைச்சு/ திணைக்களத் திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு | ஒதுக்கீட்டு நோக்கம் | ஒதுக்கீட்டு | | உண்மையன செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| | பொது நிர்வாக அமைச்சு | பயிற்சி பட்டதாரிகளுக்கு கொடுப்பனவு செலுத்துதல் | **1,200,000** | **1,200,000** | **1,197,204.30** | **99.77%** |
| | பொருளாதார விவகார அமைச்சு | | **2,800,000** | **2,800,000** | **2,651,848.94** | **94.71%** |

*3.8* **நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை**

ரூபா. **000,**

| ஆமன குறியீடு | குறியீட்டு விபரம் | *2020.12.31* திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி | *2020.12.31* திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி | எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது | அறிக்கையிடல் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| **9151** | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | | **1,637,965,081** | | |
| **9152** | இயந்திரம் மற்றும் உபகரணம் | | **509,769,275** | | |
| **9153** | காணி | | **3,933,309,595** | | |
| **9154** | அருவமான சொத்துக்கள் | | **-** | | |
| **9155** | உயிரியல் சொத்துக்கள் | | **-** | | |
| **9160** | நடைபெறும் பணிகள் | | **43,445,807,517** | | |
| **9180** | குத்தகை சொத்துக்கள் | | **-** | | |

*3.9* **கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை** **

** *பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட இறுதி கணக்காய்வு அறிக்கையினை (SCAN) செய்யப்பட்டு இங்கு இணைக்கப்பட வேண்டும்*

*இணைப்பு - 01*

## *அத்தியாயம் 04*

### *செயலாற்றுகை சுட்டிகள்*

### *4.1 நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)*

| *குறிப்பீட்டு சுட்டிகள்* | *எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு* | | |
|---|---|---|---|
| | **100% - 90%** | **75% - 89%** | **50% - 74%** |
| புகையிரத பிரிவு | | | |
| ➢ சரக்கு போக்குவரத்து புகையிரத எண்ணிக்கை | | | √ |
| ➢ தினசரி செயற்படுத்தப்படுகின்ற புகையிரத எண்ணிக்கை | √ | | |
| ➢ பிரதான புகையிரத கருத்திட்டங்களின் எண்ணிக்கை | √ | | |
| ➢ நிர்மாணிக்கப்பட்ட புகையிரத வீதி (நீளம் கி.மீ) | √ | | |
| பேருந்துப் பிரிவு | | | |
| ➢ புதிய சிசுசெறிய, கெமிசெறிய, மற்றும் நிசிசெறிய பேருந்து சேவைகளின் எண்ணிக்கை | | | √ |
| ➢ வருடமொன்றுகக்கு பயிற்றுவிக்கப்பட்ட பேருந்து பதவியணி எண்ணிக்கை | | | √ |
| ➢ செயல்படுத்தப்பட்ட அட்டவணை எண்ணிக்கை ( (ஒருங்கிணைந்த மற்றும் ஒருங்கிணைக்கப்படாத) | | √ | |
| அமைச்சின் செயலாற்றுகைக் குறிகாட்டி | | | |
| ➢ மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை | | | √ |
| ➢ பொது போக்குவரத்து சேவையினை வினைத்திறனாக்கும் பொருட்டு செயல்படுத்தப்படுகின்றன கருத்திட்டங்களின் எண்ணிக்கை | √ | | |
| ➢ அலுவலர்களின் இயலளவினை மேம்பாட்டுக்காக வழங்கப்பட்டுள்ள பயிற்சிகளின் எண்ணிக்கை | | | √ |
| ➢ பாராளுமன்றத்துக்கு வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளின் எண்ணிக்கை | √ | | |
| ➢ அமைச்சுக்கு கிடைக்கப்பெறும் திறைசேரி நிதி ஏற்பாடுகளிலிருந்து செலவு செய்யப்படுகின்ற சதவீதம் | | √ | |
| ➢ வருடத்துக்குள் பேணப்பட்டுள்ள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு எண்ணிக்கை | | √ | |
| ➢ அமைச்சின் மூலம் மாதாந்தம் மற்றும் காலாண்டு ரீதியாக உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளின் எண்ணிக்கை | √ | | |

## *அத்தியாயம் 05*

## பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றகை

### *5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டுக*

| இலக்கு /குறிக்கோள் | அடைவுகள் | குறிகாட்டிகள் | இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | **0% - 49%** | **50% - 74%** | **75% - 100%** |
| ஆரோக்கியமான வாழ்க்கையொன்றினை உறுதிபடுத்தி அனைத்து வயதுகளிலுமுள்ள அனைவரினதும் நலனை மேம்படுத்துதல் | 2030 ஆம் ஆண்டாகும் போது நெடுஞ்சாலைகளில் விபத்துக்களின் மூலம் இடம்பெறுகின்ற காயங்கள் மற்றும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையினைக் குறைத்தல் | மரண விகிதாசாரம் (2019 வருடத்துக்கு நிகராக) | √ | | |
| நகரங்கள் மற்றும் குடியிருப்புகள் பூரணத்துவம் பெற்ற, பாதுகாப்பான, வலுவான மற்றும் நிலைத்திருக்கக்கூடிய வகையில் தயாரித்தல் | குறிப்பாக இடர்பாடுகள் ஏற்பட முடியுமான நிலைமைகளிலிருக்கும் பெண்கள் , குழந்தைகள் , மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதியவர்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டு நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பினை மேம்படுத்துதல், பொது, 2030 போக்குவரத்து முறைமை கணிஷமானவில் விஷ்தரிப்பதன் மூலம் 2030 ஆம் ஆண்டாகும் போது அனைவருக்கும் பாதுகாப்பான குறைந்த விலைக்கு பெற்றுக் கொள்ள முடியுமான அணுகக்கூடிய மற்றும் நிலைப்பேறான போக்குவரத்து முறைமையை வழங்குதல். | **1.** சரக்குப் போக்குவரத்து புகையிரத எண்ணிக்கை | | √ | |
| | | **2.** தினசரி போக்குவரத்து செய்கின்ற புகையிரத எண்ணிக்கை | | | √ |
| | | **3.** பிரதான புகையிரத கருத்திட்டங்களின் எண்ணிக்கை | | | √ |
| | | 4. புதிய சிசுசெறிய, கெமிசெறிய, மற்றும் நிசிசெறிய பேருந்து சேவைகளின் எண்ணிக்கை | | √ | |

### 5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக

ஐக்கிய நாடுகள் சபையின் நிலைப்பேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க, 2030 ஆம் ஆண்டாகும்போது போதியளவிலான மற்றும் தரமான வலுவானதொரு போக்குவரத்து சேவையை ஏற்படுத்துவதற்காக போக்குவரத்து அமைச்சு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

11 ஆவது நிலைபேறான அபிவிருத்தி இலக்கான, 2030, அனைவருக்கும் பாதுகாப்பான, மலிவான, அணுகக்கூடியவாறான மற்றும் நிலைபேறான போக்குவரத்து முறைமைகளுக்கான அணுகலை வழங்குதல், வீதி பாதுகாப்பை மேம்படுத்துதல், பொது போக்குவரத்து சேவையை விரிவுபடுத்துதல் மற்றும் பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியவர்களின் தேவைகளுக்கு அதிகளவு கவனம் செலுத்துவதன் கீழ் போக்குவரத்து அமைச்சு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. அதன்படி, சுற்றுச்சூழல் நட்பு மற்றும் பொருளாதார ரீதியாக சாத்தியமான போக்குவரத்து வசதியான **Park and Ride** முறையின் கீழ் பொது பேருந்து சேவையை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. போக்குவரத்து தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் பொது பேருந்து சேவைகளுக்கு பயணிகளை ஈர்க்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வரும் இந்த கருத்திட்டத்தின் மூலம் காலை மற்றும் மாலை போன்ற மும்முரமாக ஈடுபடும் நேரங்களில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலைக் குறைத்தல், போக்குவரத்து சேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற எரிபொருள் பயன்பாட்டைக் குறைத்தல், வாகன உமிழ்விலிருந்து ஏற்படுகின்ற சுற்றாடல் மாசுபாட்டினைக் குறைத்தல், வீதி விபத்துகளைக் குறைத்தல் மற்றும் நேரத்தை மிச்சப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும்.

மேலும், குழந்தைகளுக்கான பாதுகாப்பான மற்றும் நம்பகமான பொதுப் போக்குவரத்து பேருந்து சேவையாக "சிசுசெறிய" மற்றும் நகரத்திலிருந்து வெகு தொலைவில் வாழும் மக்களுக்காக செயல்படுத்தப்படுகின்ற "கெமிசெறிய" மற்றும் இரவு மற்றும் காலை நேரங்களில் போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்காக செயல்படுத்தப்படுகின்ற "நிசிசெறிய" சேவை இப்போது வெற்றிகரமாக இயங்குகின்றன.

9 ஆவது நிலைபேறான அபிவிருத்தி இலக்கின் கீழ், பிராந்திய மற்றும் எல்லைக்கு இடையேயான உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட தரமான, நம்பகத்தன்மை வாய்ந்த, நிலைபேறான மற்றும் நிலைத்து நீடித்திறக்கக்கூடிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கி செயற்படுத்தப்பட்ட மாத்தறை கதிர்காமம் புகையிரத வீதிக்கருத்திட்டம், குருணாகல் ஹபரணை புகையிரத வீதிக்கருத்திட்டம் மற்றும் கொழும்பு புறநகர் புகையிரத வீதிக்கருத்திட்டத்தினூடாக வினைத்திறன் வாய்ந்த பொது போக்குவரத்தினை மக்களுக்கு வழங்குவதற்கு இயலுமையாக அமையும். இதற்கு மேலதிகமாக, புகையிரத தொகுதியினை வலுப்படுத்துவதற்காக புதிய புகையிரதப் பெட்டிகளை கொள்வனவு செய்தல், பயணிகள் புகைவண்டிப் பெட்டிகள் புனரமைத்தல் மற்றும் புகையிரத தொகுதியின் தொடர்ச்சியான பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், பயணிகளின் வசதி மற்றும் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து புகையிரத மேடைகளை தூக்குதல் மற்றும் நீட்டிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

3 வது நிலைபேறான அபிவிருத்தி இலக்கான வீதி விபத்துக்களால் ஏற்படுகின்ற உலகளாவிய இறப்புகள் மற்றும் காயங்களின் எண்ணிக்கையை பாதியாகக் குறைக்கும் நோக்கத்தினை முன்னணியாகக் கொண்டு வீதி பாதுகாப்பு குறித்து 10 பாடசாலைகளில் மாணவர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் பாடசாலை வீதி பாதுகாப்பு வலயங்களை நிறுவுதல் மேற்கொள்ளப்பட்டது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் போக்குவரத்து அமைச்சு பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பாரிய சவால்களாக பாரிய மூலதன கருத்திட்டங்களுக்கான முதலீட்டைப் பெறுவதிலுள்ள சிக்கல்கள்,வேலைநிறுத்தங்கள் மற்றும் தொழிலாளர்களின் பிரச்சினைகள், நிலப் பிரச்சினைகள் உதாரணங்களாக குறிப்பிட முடியும். போக்குவரத்து துறைத் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சி முடிவுகள் துறையின் மேம்பாட்டிற்கு நடைமுறையில் பயன்படுத்தும்போது ஏற்படுகின்ற பலவீனங்களும் நிலைப்பாட்டு இலக்குகளை அடைவதில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன..அதே நேரத்தில், புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கண்டறிவுகளுக்கான வாய்ப்பின்மை தற்போதைய சூழ்நிலையில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

*அத்தியாயம் 06*

## மனித வள விபரம்

### *6.1 பதவியணி முகாமைத்துவம்*

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | பதவி வெற்றிடம் (அதிகப்படியான)** |
|---|---|---|---|
| சிரேட்ட | 24 | 21 | 3 |
| மூன்றாம் நிலை | 4 | 4 | 0 |
| இரண்டாம் நிலை | 96 | 92 | 4 |
| ஆரம்ப நிலை | 55 | 51 | 4 |

### *6.2 ** பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக*

அமைச்சின் தூரநோக்கு மற்றும் செயற்பணியினை நிறைவேற்றும் பொருட்டு இலக்காகக் கொண்ட நோக்கங்களை அடையும்போது மனிதவளங்களிலுள்ள பற்றாக்குறை நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு ஏற்படும் காலத்தினை நீட்டிக்கும் பொருட்டான இயலுமை உண்டு.

### *6.3 மனித வள அபிவிருத்தி*

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா '000) | | நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு) | வெளியீடு/ பெற்றுக் கொண்ட அறிவு* |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| Eighty – Second Annual Session of the UN Economic Commission for Europe (UNECE) Inland Transport Committee (ITC) | 01 | 02.23 – 02.29 | - | 690,524.51 | வெளிநாட்டு | |
| Transport and Climate change week 2020 | 01 | 03.01 – 03.07 | - | 120,169.72 | வெளிநாட்டு | |
| Higher National Diploma in Public Procurement and Contract Administration 2020/2021 | 01 | 14 Months | 120,000.00 | - | உள்நாட்டு | |
| Master of Law (L.L.M. | 01 | 02 Years | 151,500.00 | - | உள்நாட்டு | |
| MPM (2018-2020) | 01 | 02 Years | 100,000.00 | - | உள்நாட்டு | |
| Awareness seminar on Establishment Code and Staffing Procedure | 25 | 01 Day | 10,000.00 | - | உள்நாட்டு | |
| **Total Investment** | | | **381,500.00** | **810,694.23** | | |

* ***நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை சுருக்கமாக விளக்குக***

அமைச்சின் நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதன் மூலம் அமைச்சிற்குள் அவர்களுக்குரிய கடமைகள் மிகவும் திருத்தமான முறையிலும் வினைத்திறன் வாய்ந்த முறையிலும் மேற்கொள்வதற்கு இயலுமை கிடைத்துள்ளது. மேலும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்பதன் மூலம் பெறுகின்ற அனுபவங்கள் அவர்களது கடமைகளில் ஈடுபடும்போது பிரயோகித்துக் கொள்வதற்கும் மற்றும் அதன்மூலம் வினைத்திறன் மேம்படுத்துவதும் இடம்பெறுகின்றது. அதேபோன்று வெளிநாட்டுப் பயிற்சிகள் கிடைப்பதன் மூலம் அலுவலர்களுக்குள் தன்முனைப்பாற்றல் இடம்பெறுவதுடன் ,அதனூடாக பெற்றுக்கொள்ளப்படும் அறிவு மற்றும் திறமைகளைப் பயன்படுத்தி போக்குவரத்து துறையில் அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கு இயலுமைக் கிடைத்துள்ளது. (அதனுடன் தொடர்புடைய சான்றிதழ்கள் மற்றும் அறிக்கைகள் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.)

## *அத்தியாயம் 07*

## இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது /இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதி அறிக்கைகள்/கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரசு அலுவலர்கள் முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | - | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | - | | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்கு | - | | |
| 1.6 | ஏனைய | - | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி. 445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு/தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.9 | இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 3 | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **3.2** | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது | இணக்கமானது | | |
| **3.3** | ஒவ்வொரு கொடுக்கல் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது | இணக்கமானது | | |
| **3.4** | 2014.05.11 திகதிய அரசு கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை | இணக்கமானது | | |
| **4** | **வருடாந்த திட்டத்தனைத் தயாரித்தல்** | | | |
| **4.1** | வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| **4.2** | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| **4.3** | வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| **4.4** | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை வ.செ.தி. திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **4.5** | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| **5** | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| **5.1** | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது | இணக்கமற்றது | ஏனைய நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்களின் மூலம் குறிப்பிட்ட திகதியிற்கு பதில் அறிக்கைகள் கிடைக்காமை. | இது தொடர்பாக நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்கள் விழிப்பூட்டப்பட்டுள் ளன. |
| **6** | **உள்ளகக் கண்காய்வு** | | | |
| **6.1** | நி.பி. 134 (2) DMA/1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| **6.2** | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல் | இணக்கமானது | | |
| **6.3** | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரவு 40(4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **6.4** | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| **7.1** | DMA *1-2019* சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்த்து *04* கணக்காண்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| **8** | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| **8.1** | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. *01/2017* சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் | இணக்கமானது | | |
| **8.2** | மேற்கண்ட சுற்றறிக்கையின் *13* ஆம் அத்தியாயத்தின்படி சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும் அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார் | இணக்கமானது | | |
| **8.3** | அரசு நிதி சுற்றறிக்கை இல. *05/2016* இன்படி பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| **8.4** | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| **8.5** | நி.பி. *772* இன்படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது | இணக்கமானது | | |
| **9** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| **9.1** | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளை தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்கமற்றது | கொரோனா தொற்று நோய்க் காரணமாக குறைந்தள வில் அதிகாரிகள் கடமைக்கு அறிக்கையிடல் | பிரிவில் உள்ள அனைத்து அதிகாரிகளும் *2021* ஆம் ஆண்டில் சமூகமளிப் பார்கள் என்று எதிர்பார்க்கப் படுவதால், அது சிக்கலாக இல்லை. |
| **9.2** | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும் | இணக்கமற்றது | வாகனங்களை அகற்றுவதற் காக வாகனங்களின் உரிமை அமைச்சுக்கு கையளிக்கும் போது நடவடிக்கை களில் தாமதம் | குறித்த வாகனங்களின் உரிமை முறைப்படி அமைச்சுக்கு பெற்றுக்கொள்வ தற்குத் தேவையான தகவல்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத் திறகுச் முன் வைக்கப்பட்டுள்ளன. |
| **9.3** | வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| **9.4** | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி. *103,104,109* மற்றும் *110* இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதலவேண்டும் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **9.5** | *2016.12.29* திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.*2016/30* இன் பத்தி *3.1* இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல் | இணக்கமானது | | |
| **9.6** | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்கைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும் | இணக்கமானது | | |
| **10** | ***வங்கி கணக்குகளின் முகாமை*** | | | |
| **10.1** | உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **10.2** | மீளாய்வு வருடத்தில் காணப்பட்டசெயற்படாத வங்கிக் கணக்குகளனைத் தீர்த்தல் | இணக்கமானது | | |
| **10.3** | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட வேண்டிய நிலுவைகள வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாத்த்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல் | இணக்கமானது | | |
| **11** | ***நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்*** | | | |
| **11.1** | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல் | இணக்கமானது | | |
| **11.2** | நி.பி. *94(1)* இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத போறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும் | இணக்கமானது | | |
| **12** | ***அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு*** | | | |
| **12.1** | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| **12.2** | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல் | இணக்கமானது | | |
| **12.3** | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல் | இணக்கமற்றது | சட்டரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் | |
| **13** | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| **13.1** | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நீ.பி. *571* பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |
| **13.2** | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **14** | ***முன்பணக் கணக்கு*** | | | |
| **14.1** | மீளாய்வு ஆண்டின் உறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| **14.2** | நி.பி. *371* இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல் அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும் | இணக்கமானது | | |
| **14.3** | நி.பி. *371* இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல் | இணக்கமானது | | |
| **14.4** | மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **15** | **வருமான கணக்கு** | | | |
| **15.1** | விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும் | இணக்கமானது | | |
| **15.2** | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் | இணக்கமானது | | |
| **15.3** | நி.பி. 175 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **16** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| **16.1** | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **16.2** | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல் | இணக்கமானது | | |
| **16.3** | 2017.09.20 தேதியிட்ட எம்.எஸ்.டி.. சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| **17** | **பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| **17.1** | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல் | இணக்கமானது | | |
| **17.2** | அமைப்பு பற்றிய தகவல்களை வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துக்கள்/ குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல் | இணக்கமானது | | |
| **17.3** | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல் | இணக்கமற்றது | | |
| **18** | **பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்துத** | | | |
| **18.1** | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 5 / 2008 மற்றும் 5 /2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல் | இணக்கமற்றது | அமைச்சுகளின் மாற்றங்கள், அமைச்சின் நோக்கெல்லை மாற்றங்கள், நிர்வாகத்தின் மற்றும் பதவியணியினரின் மாற்றங்கள், மற்றும் நிலவும் கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக இந்த பணிகளில் தாமதம் ஏற்பட்டிருப்பதுடன் காரணமாக இந்த நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டிருப்பதுடன் எதிர்காலத்தில் இதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும். | |
| **18.2** | சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொருத்தவரை, பிரசைகள் பட்டயம் /பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது | இணக்கமற்றது | | |
| **19** | **மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| **19.1** | 2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல் | இணக்கமற்றது | அமைச்சுகளின் மாற்றங்கள், அமைச்சின் நோக்கெல்லை மாற்றங்கள், நிர்வாகத்தின் மற்றும் பதவியணியினரின் மாற்றங்கள் மற்றும் | |

| | | | | |
|---|---|---|---|---|
| **19.2** | *ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்* | இணக்கமற்றது | *நிலவும் கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக இந்த பணிகளில் தாமதம் ஏற்பட்டிருப்பதுடன்* காரணமாக இந்த சுற்றுநிறுபத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டிருப்பதுடன், எதிர்காலத்தில் இதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும். | |
| **19.3** | *மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது* | இணக்கமற்றது | | |
| **19.4** | *மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்துதல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரி நியமித்தல்* | இணக்கமற்றது | | |
| **20** | ***கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்*** | | | |
| **20.1** | *முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்தல்* | இணக்கமானது | | |